S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE செவ்வாய் டிசம்பர் 02 * 2025 * மலர் -1 * இதழ்-184* VOL-1 * ISSUE-184 விலை ரூ.3 * பக்கம் -4

## திருப்பத்தூர் அருகே பஸ் மோதி 11 பேர் பலி:

# இதுவரை 10 பேரின் உடல்கள் அடையாளம் தெரிந்தது!

























திருப்பத்தூர்,டிச.02–

திருப்பத்தூர் அருகே அரசு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்தில் 9 பெண்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 10 பேர் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது .

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி பேருந்து நிலையத்திலிருந்து திண்டுக்கல்லுக்கு அரசு பேருந்து சென்றது. பேருந்தை ஓட்டுநர் சுதாகர் ஓட்டினார். அதேசமயத்தில் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்திலிருந்து திருப்பூர் வழியாக காரைக்குடிக்கு மற்றொரு அரசு பேருந்து வந்தது. பேருந்தை நிலக்கோட்டையை சேர்ந்த ஓட்டுநர் சென்றாயன் ஓட்டினார். இரு பேருந்துகளும் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் அருகே வைரவன் பட்டி சமத்துவபுரம் பகுதியில் நேற்று மாலை சென்றபோது திடீரென கட்டுப்பாட்டை இழந்து

## திருமண நாளில் உயிரிழந்த வியாபாரி; உருக்கமான தகவல்கள்!!

நேருக்கு, நேர்மோதியது.

இந்த விபத்தில் சிங்கம் புணரி பகுதியை சேர்ந்த முத்துமாரி (60) இவர் தனது குடும்பத்துடன் 32–வது திருமண நாளை முன்னிட்டு பிள்ளையார்பட்டி கற்பக விநாயகரை தரிசனம் செய்வதற்காக பேருந்தில் வந்த போது விபத்தில் உயிரிழந்தார்.

காரைக்குடி பகுதியை சேர்ந்த கல்பனா (36), நிலக்கோட்டை சென்றாயன் ஓட்டுநர் (36), காரைக்குடி அருகே உள்ள அரியக்குடி மல்லிகா (61) தேவகோட்டை குணலட்சுமி (55), மதுரை மாவட்டம், மேலூர் செல்லம் (55), புதுக்கோட்டை மாவட்டம், அம்மன் குறிச்சியை சேர்ந்த தெய்வானை (55), சென்னையைச் சேர்ந்த லாவண்யா (50), திண்டுக்கல் பகுதியை சேர்ந்த பொற்செல்வி (60), கொட்டாம்பட்டியை சேர்ந்த முத்துலட்சுமி (45) என 10 உடல்கள் மட்டும் அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும் காரைக்குடி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு வைக்கப்பட்டுள்ள ஒரு பெண் உடல் மட்டும் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

இந்நிலையில் சிங்கம்புணரி பகுதியைச் சேர்ந்த தங்கைய்யா மகன் முத்துமாரி 60 இவர் மளிகை பொருட்களை மொத்தமாக வாங்கி வந்து பொட்டலம் போட்டு கிராமப்புறங்களுக்கு இருசக்கர வாகனத்தில் சென்று சில்லறையாக விற்பனை செய்துவருகின்றார். முத்துமாரிக்கு கலைச்செல்வி என்ற மனைவியும் செல்வகுமார் என்ற மகன் ஒரு மகள் உள்ளார்கள் மகள் திருமணம் ஆகி விருதுநகர் பகுதியில் உள்ளார். மகன் செல்வகுமார் தனது மனைவி பவித்ராவுடன் தந்தை தாயுடன் சிங்கம்புணரி எஸ்.எஸ்.நகர் பகுதியில் வசித்து வருகின்றார்.

இந்நிலையில் முத்துமாரி கலைச்செல்வி தம்பதிகளுக்கு 32 வது திருமண நாளை முன்னிட்டு நான்கு பேரும் பிள்ளையார்பட்டி உள்ள விநாயகரை தரிசிக்க பேருந்தில் சென்ற பொழுது இந்த கோர விபத்து நடந்தது. இதில் முத்துமாரி சம்பவ இடத்திலேயே இறந்தார். அவரது மனைவி கலைச்செல்வி இரண்டு கால்களிலும் பலத்தகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றார். மகன் செல்வகுமாருக்கு தாடையிலும் காலிலும் காயம், அவரது மனைவி பவித்ராவிற்கும் காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். தனது திருமண நாளில் கணவரை இழந்தது பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.



ஈரோடு வந்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினை பெருந்துறையில் ஈரோடு மத்திய மாவட்ட கழகம் சார்பில் முன்னாள் அமைச்சர் ஈரோடு மத்திய மாவட்ட பொறுப்பாளர் தோப்பு.என்.டி.வெங்கடாச்சலம் தலைமையில் மிகச் சிறப்பான முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரியில் உள்ள மனநலம் குன்றியோர் காப்பகத்தில் நலத்திட்ட உதவிகளை மதியழகன் எம்.எல்.ஏ. வழங்கினார்.



ஏற்காட்டில் அடிக்கடி பெய்யும் சாரல் மழை மற்றும் பனிமூட்டத்தால் கடும் குளிர் நிலவி வருகிறது. அதன் தாக்கத்தில் இருந்து தப்பிக்க அப்பகுதியினர் நெருப்பு மூட்டி குளிர் காய்ந்து வருகின்றனர்.

## தேனீக்கள் கொட்டியதில் போலீஸ் அதிகாரி சாவு !

லக்னோ, டிச.2

உத்தரப்பிரதேச காவல்துறையில் போலீஸ் அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றவர் அட்டர் சிங் (வயது 62). இவர். பணி ஓய்வுக்குப்பின் கிராதாபாத் கிராமத்தில் வசித்து வந்தார்.

இந்நிலையில், அட்டர் சிங் தனது 2 மகன்களுடன் கிராமத்தில் உள்ள தனது தோட்டத்திற்கு நடந்து சென்றுள்ளார். அப்போது தோட்டத்தில் இருந்த தேனீக்கள் எதிர்பாராதவிதமாக அட்டர் சிங் மற்றும் 2 மகன்களை சரமாரியாக கொட்டியது.

இதில் அதிர்ச்சியடைந்தவர்கள் தேனீக்கள் தாக்குதலில் இருந்து தப்பிக்க அங்கும் இங்கும் தப்பி ஓடினர். ஆனாலும், அட்டர் சிங் மீது தேனீக்கள் அதிக அளவில் கொட்டின. தேனீக்கள் கொட்டியதில் உடல்நலம் பாதிக்கப்பட்ட அட்டர் சிங் தோட்டத்திலேயே மயங்கி விழுந்தார். உடனடியாக அவரை மீட்டு குடும்பத்தினர் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மருத்துவமனையில் அட்டர் சிங்கை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்தனர்.

## ஓசூர் வாட்ச் ஷோரூமில் துணிகரம்:

# ரூ. 5 லட்சம் தங்க கைக்கடிகாரம் திருட்டு!

## மர்ம நபருக்கு வலை!!

ஓசூர், டிச 2

ஓசூர் சிப்காட் பகுதியில் தனியார் ஷோரூம் உள்ளது. இங்கு ஓசூர் மற்றும் பெங்களூர் போன்ற நகரத்தில் இருந்து வாடிகையாளர்கள் வந்து வாட்சுகளை வாங்குவது வழக்கம்.

இந்த ஷோரூமில் வழக்கம் போல வாடிகையாளர்கள் வாட்சுகளை வாங்கவும் பார்வையிடவும் வந்து இருந்தனர். மதியம் உணவு நேரம் என்பதால் ஷோரூமில் பணி புரியும் ஊழியர்கள் மதிய உணவு உண்பதற்காக சென்ற நிலையில், ஐந்து நபர்கள் மட்டுமே பணியில் இருந்துள்ளனர். அப்போது சுமார் மதியம் 1.30 மணியளவில் ஒரு நபர் ஹெல்மெட் உடன் உள்ளே வந்தவர், தங்கம் கைக்கடிகாரம் இருக்கும் பகுதிக்கு வந்து,

தலைகாவசத்தை எடுத்துவிட்டு தங்க வாட்ச்சை பல முறை எடுத்து பார்த்து விட்டு சென்றுள்ளார்.

இந்நிலையில் சுமார் மதியம் 2 மணியளவில் உணவு உன்று விட்டு ஷோரூமுக்கு திரும்பி வந்த ஊழியர்கள், வாட்சுகளை சரி பார்க்கும் போது, ஹெல்மெட் நபர் பார்த்து கொண்டிருந்த தங்க வாட்ச் காணவில்லை என தெரிய வந்துள்ளது. உடனே ஷோரூம் மேலாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலாளர் உடனே அங்குள்ள சிசிடிவி கேமராக்கள் ஆய்வு செய்த பொழுது மேற்படி ஹெல்மெட் ஆசாமி சுமார் ரூ.5 லட்சம் மதிப்புள்ள தங்க கைக்கடிகாரத்தை திருடி கொண்டு வெளியே சென்றது தெரியவந்தது.

இந்த திருட்டு சம்பவம் தொடர்பாக சிசிடிவி வீடியோ ஆதாரத்துடன் சிப்காட் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தனர். புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்த போலீசார், ஹெல்மெட் ஆசாமியை தேடி வருகின்றனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் கோவை மாநகர் மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர் தனபால் தனது திருமண நாளை முன்னிட்டு வாழ்த்து பெற்றார்.



பழனி லட்சுமி நாராயண பெருமாள் கோவில் கும்பாபிஷேகம் நேற்று அதிகாலையில் நடைபெற்றது. இதில் கோவில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து, அறங்காவலர் குழு தலைவர் கே.எம்.சுப்பிரமணியம், கும்பாபிஷேக உபயதாரர் ஸ்ரீகந்தவிலாஸ் அதிபர் என் செல்வகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.




துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்ட திமுக இளைஞரணி மற்றும் இந்தியன் பிட்னஸ் பெரடேசன் இணைந்து நடத்தும் 6வது மிஸ்டர். உதயநிதி கிளாசிக் ஸ்ட்ராங் மேன் ஆஃப் இந்தியா 2025, ஓபன் மிஸ்டர் இந்தியா 2025 போட்டிகள் கோவையில் நடைபெற்றது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து வீரர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி கலந்து கொண்டு தலைமை தாங்கினார். போட்டிகளில் வென்ற வீரர்களுக்கு பரிசுகளை மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, கூடலூர் நகரச் செயலாளர் மற்றும் கூடலூர் நகர் மன்ற தலைவர் அறிவரசு, எஸ்.எஸ்.குளம் ஒன்றிய செயலாளர் எஸ்.பி.சுரேஷ்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பா. விக்னேஷ் குமார் ஆகியோர் பரிசுகளை வழங்கினார்கள். மேலும் இந்த விளையாட்டுப் போட்டிகளில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை தங்களது திறமையை சிறப்பாக வெளிப்படுத்தினார்கள். போட்டிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் பதக்கங்களும், சான்றிதழ்களும், கோப்பைகளும் வழங்கப்பட்டது.



## திருப்பூர் மாவட்டம்

# தாராபுரம் பேருந்து நிலையம் எதிரே உள்ள தனியார் பள்ளியை இடிக்க உயர்நீதிமன்ற உத்தரவு ; பெற்றோர்கள் சாலை மறியல்!

திருப்பூர், டிச.2

தகவல் கிடைத்து விரைந்து வந்த காவல்துறை அதிகாரி டிஎஸ்பி, ஆர் டி ஓ அவர்களும் பள்ளிக் குழந்தைகளின் பெற்றோர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.பேச்சுவார்த்தையில் உங்களுக்கு போதிய கால அவகாசங்கள் வாங்கித் தருகிறோம். என்று கூறிய பின்பு பெற்றோர்கள்தற்காலிகமாகசாலைமரிப்புபோராட்டத்தை கைவிட்டனர்.

தாராபுரம் தேன்மலர் பள்ளி பங்காளி சண்டையில் பங்காளி இடத்தில் நான்கு அடி சேர்த்து பள்ளிக்கூடம் கட்டப்பட்டுள்ளது. தற்போது அதை இடிக்க வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்புத்துள்ளது 20252026 ஆம் ஆண்டுக்கான கல்வி ஆண்டில் 10மற்றும் 12வகுப்பு பொது தேர்வு எழுதுவதற்கு இன்னும் 5 மாதங்களே உள்ளது.

இப்போது நீதிமன்றம் பள்ளி கட்டடத்தை உடனடியாக இடிக்க வேண்டும் என்று சொன்னால் அந்த மாணவ மாணவர்களுடைய நிலைமை என்ன

மாணவ மாணவியரின் நலன் கருதி இந்த கல்வியாண்டு முடியும் வரை அதாவது இன்னும் ஐந்து மாதங்கள் கழித்து நீதிமன்ற உத்தரவை அமல்படுத்த வேண்டும் என்பது பெற்றோர்கள் எதிர்பார்ப்பு. தேன்மலர் பள்ளியில் பயிலக்கூடிய ஆயிரக்கணக்கான மாணவர்களின்

கல்வி பாதிக்கப்படக்கூடாது அதற்கு மாவட்ட நிர்வாகமும் பள்ளிக்கல்வி துறையும் மாநில அரசு நிர்வாகமும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.



சென்னை மாவட்டம், விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, எம்.ஜி.ஆர் நகர், சென்னை மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற வாக்காளர் சிறப்பு உதவி மையத்தில் வாக்காளர்கள் பூர்த்தி செய்ப்பட்ட கணக்கீட்டுப் படிவத்தினை வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் வழங்கினர்.



பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளில் குடியிருப்பு வாசிகள் தரும் தகவலின் அடிப்படையில், ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் உள்ளிட்ட பழைய பொருட்கள் அகற்றும் சேவை நடைபெற்று வருகிறது, இதன் ஒரு பகுதியாக, இராயபுரம் மண்டலம், வார்டு 58க்குட்பட்ட மு.கா.கா. தெருவில் உள்ள வீட்டிலிருந்து மரச்சாமான்கள் உள்ளிட்ட பழைய பொருட்கள் அகற்றப்பட்டன.

## கிருஷ்ணகிரி அவதானப்பட்டி

# வயல்களில் இரை தேடி குவிந்த வாத்து - வெள்ளை நாரைகள்!



கிருஷ்ணகிரி, டிச.02:


கிருஷ்ணகிரி மாவட்டம் அவதானப்பட்டி பகுதியில், நெல் அறுவடை வயல்களில் இரை தேடி வாத்துக்களை மேய்த்து வருகின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டம், அவதானப்பட்டி, டேம் ரோடு, திம்மாபுரம், குண்டல பட்டி, கால்வே அள்ளி, காவேரிப் பட்டணம், வேலம்பட்டி, பெண்ணேஸ் வரமடம், நெடுங்கல், பாலே குளி உள்ளிட்ட பகுதிகளில், கடந்த ஒரு வாரமாக நெல் அறுவடை பணி தீவிரமாக நடந்து வருகிறது. விவசாயி கள் நெல் அறுவடையில் மும்முரமாக உள்ளனர். பணியின் அறுவடை போது, முதிர்ந்த நெல் மணிகள் விவசாய நிலத்தில் சிதறுவது வாடிக்கை. கடந்த காலங்களில் சிந்தும் நெல்மணிகளை சேகரிப்பதற்காக, வயதானவர்கள் வயல்களில் முகாமிடுவது வழக்கம். இவர்கள் அறுவடை செய்த நெற்கதிர் களை எடுத்து விடக்கூடாது என்பதில் வயலுக்கு சொந்தக்காரர்கள் மிகுந்த கவனமாக கண்காணித்து கொண்டிருப்பர். நெல்சேகரிப்பவர்களுக்கு போட்டியாக வயலில் பறவை கூட்டமும் முகாமிட்டவாறு காணப்படும். நெல் அறுவடை முடிந்த வயல்களில் நெல்மணிகள் மண்ணில் சிதறி காணப்படும். இவைகளை வாத்து மேய்ப்பவர்கள் கூட்டம் கூட்டமாக வாத்துக்களை நெல் வயல்களில் விட்டு, வாத்துக்களுக்கு இறையாக நெல்மணிகளை உண்டு செல்லும். மேலும் நாரைகள் கூட்டம், கூட்டமாக வயல்களில் இறங்கி நெல் மணிகளை சேகரித்து செல்லும். தற்போது, அறுவடை முடிந்த வயல்களில், நெல் மணிகள் மற்றும் மண்ணில் இருந்து மேலே வரும் புழுக்களை இரையாக்கி கொள்வதற்காக ஏராளமான நாரைகள் குவிந்து வருகிறது. விவசாய நிலங்களில் திரும்பிய இடம் எல்லாமல் வெள்ளை நிறத்தில் நாரைகள் தென் படுவதால் ரம்மியமாக உள்ளது.

# வீட்டில் வளர்த்து வந்த செல்லப்பிராணிகளை கொன்ற ஆசாமி!

## போதையில் வெறிச்செயல்!!

வேடசந்தூர், டிச..02

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே உள்ள எரியோடு அப்பாக்காளை நாடார் தெருவை சேர்ந்த ரியல் எஸ்டேட் அதிபர் சீனிவாசன் என்பவர் தனது வீட்டின் மாடியில் செல்லப்பிராணியாக முயல் மற்றும் பூனை குட்டிகள் வளர்த்து வந்துள்ளார். இந்நிலையில் அவரது குடும்பத்தினர் வீட்டின் யாரும் இல்லாத நேரத்தில் மாடியில் ஏறிச்சென்ற மது போதையில் இருந்த மர்ம ஆசாமி 3 முயல், 2 பூனையையும் கத்தியால் குத்திக் கொன்று தலைகளை மட்டும் தனியாக வெட்டி எடுத்து ஒரு பையில் போட்டிக்கொண்டிருந்தார். அப்போது வெளியே சென்று விட்டு வீடு திரும்பிய சீனிவாசன் மாடியில் சத்தம் கேட்டு சென்று பார்த்தபோது



மது போதையில் இருந்த மர்ம ஆசாமி முயல் மற்றும் பூனையை கொன்று கொண்டிருந்தார்.சீனிவாசனை பார்த்தவுடன்ரத்தம்சொட்டசொட்ட கத்தியுடன் அங்கிருந்து ஓடி தப்பிச் சென்றுவிட்டார். இது குறித்து எரியோடு போலீசில் சீனிவாசன் புகார் செய்தார். போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கூடலூர் அருகே

# கால்நடைகளை வேட்டையாடிய புலி கூண்டில் சிக்கியது!

ஊட்டி,டிச.02

நீலகிரிமாவட்டம்மூன்று மாதங்களாக கால்நடைகளை வேட்டையாடி வந்த புலி வனத்துறையினர் வைத்த கூண்டில் புலி சிக்கியது.நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே உள்ள தேவர் மட்டம் பகுதியில் 20 க்கும் மேற்பட்ட தானியங்கி கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்தப்பட்டும்,நான்கு இடங்களில் புலியை பிடிக்க பிரத்யேக கூண்டு வைத்து வனத்துறையினர் நடவடிக்கைமேற்கொண்டு



சோலை அதன் சுற்றுவட்டார கிராம பகுதிகள் முதுமலை புலிகள் காப்பக வனப்பகுதியை ஒட்டி அமைந்துள்ளது.

இந்த நிலையில் கடந்த நான்கு மாதங்களில் தேவர் சோலை அருகே உள்ள கொட்டாய் மட்டம் பகுதியில் 20 க்கும் மேற்பட்ட வளர்ப்பு கால்நடைகளை புலி தாக்கி கொன்ற நிலையில்,அப்பகுதி மக்கள் புலியை பிடிக்க வேண்டும் என வனத்துறையினருக்கு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து வனத்துறையினர் தேவர்சோலை அருகே உள்ள கொட்டாய் வந்தனர்.

இந்த நிலையில் இன்று புலி கொட்டாய் மட்டம் பகுதியில் வைக்கப்பட்ட கூண்டில் புலி சிக்கியது. இதனால் பொதுமக்கள் நிம்மதி அடைந்தனர். தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வனத்துறை அதிகாரிகள் மற்றும் கால்நடை மருத்துவர் வரவழைக்கப்பட்டு பிடிக்கப்பட்ட புலியைமுதுமலை புலிகள் காப்பக வனப்பகுதியில் விடுவிப்பதா அல்லது வன விலங்கு மீட்பு மையத்திற்கு கொண்டு செல்லப்படுவதா போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# குரூப்1, 1ஏ பணியிடங்களுக்கான முதன்மைத்தேர்வு!

சென்னை,டிச .2

சப்கலெக்டர், டி.எஸ்.பி., வணிக வரி உதவி கமிஷனர், ஊரக வளர்ச்சி உதவி இயக்குனர், மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரி, தொழிலாளர் நலத்துறை உதவி கமிஷனர் ஆகிய குரூப்1 பதவிகளில் 70 காலிப்பணியிடங்களும், உதவி வனப்பாதுகாவலர் (குரூப்1ஏ) பதவியில் 2 காலிப்பணியிடங்களும் என மொத்தம் 72 இடங்களுக்கான முதல்நிலை தேர்வு கடந்த ஜூன் மாதம் 15ந்தேதி நடைபெற்றது.

இந்த தேர்வை 1 லட்சத்து 81 ஆயிரத்து 422 பேர் எழுதினார்கள். இதற்கான தேர்வு முடிவு கடந்த ஆகஸ்டு மாதம் 28ந்தேதி வெளியானது. தேர்வில் 1,865 பேர் வெற்றி பெற்றிருந்தனர். அதில் வெற்றி பெற்றவர்கள் அடுத்தகட்டமாகமுதன்மைத்தேர்வை எழுத வேண்டும்.

அவர்களுக்கான முதன்மைத்தேர்வு நாளை (திங்கட்கிழமை) தொடங்குகிறது. நாளைதமிழ் தகுதி தேர்வு நடைபெற உள்ளது. அதனை தொடர்ந்து குரூப்1 பதவிகளுக்கு தாள்2, தாள்3, தாள்4 தேர்வு முறையே 2, 3, 4ந்தேதிகளிலும், குரூப்1 ஏ பதவிகளுக்கு முறையே 8, 9, 10ந்தேதிகளிலும் நடக்க இருக்கிறது. இந்த தேர்வுக்காக சென்னையில் 19 மையங்கள்அமைக்கப்பட்டிருக்கின்றன.

## கோவையின் மையப்பகுதியில்

# ரூ.750 கோடி மதிப்பில் 'ஜி ஸ்கொயர் தி ரெசிடென்சி' ஜி ஸ்கொயர் அறிமுகம்!



கோவை,டிச.02

இந்தியாவின் மிகப்பெரிய வீட்டுமனைத் திட்ட மேம்பாட்டு நிறுவனமாக முன்னணி வகிக்கும் ஜி ஸ்கொயர் கோவையில் தனது புதிய முதன்மை திட்டமான 'ஜி ஸ்கொயர் தி ரெசிடென்சி' என்ற திட்டத்தை அறிவித்துள்ளது. ஜி ஸ்கொயரின் நிறுவனரும், நிர்வாக இயக்குனருமான பாலா ராமஜயம் ஜி ஸ்கொயர் தி ரெசிடென்சி' குறித்து கூறுகையில் சுமார் 16.3 ஏக்கர் பரப்பளவில், ரூபாய்.750 கோடி மதிப்பிலான இந்த ஆடம்பர சொகுசு மனைத்திட்டம், வர்த்தக மற்றும் குடியிருப்பு தேவைகளுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில் எல்லோராலும் அதிகம் விரும்பப்படும், மிக முக்கிய இடமாகக் கருதப்படும் ஜி.வி ரெசிடென்சிக்கு நேர் எதிரே இத்திட்டம் அமைந்துள்ளது. மேலும், கோவையில் மிக வேகமாக வளர்ந்து வரும் பீளமேடு குடியிருப்புப் பகுதிக்கு மிக அருகில் உள்ள ராஜீவ் காந்தி நகருக்கு அடுத்து அமைந்துள்ளதால், நகரின் மையப்பகுதியில் தங்களது கனவு இல்லங்களையோ அல்லது வர்த்தக கட்டிடங்களையோ கட்ட விரும்பும் மக்களின் முதல் தேர்வாக முக்கியத்துவம் பெறும் திட்டமாக 'ஜி ஸ்கொயர் தி ரெசிடென்சி' அமைந்துள்ளது.கோவை மாநகரின் ப்ரீமியம் நில மதிப்பை மறுவரையறை செய்யும் வகையில், ஜி ஸ்கொயர் இந்தத் திட்டத்தை மிகச்சிறந்த விலையில் அறிமுகப்படுத்தியுள்ளது



# புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூட கட்டிடம்; அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார்!

திருப்பத்தூர் டிச.2

திருப்பத்தூர் மாவட்டம் விஷமங்கலம் ஊராட்சி அங்கநாத வலசை கிராமத்தில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் (20242025) ரூ.26,50,000 மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள சமுதாய கூட கட்டிடம் திறப்பு விழா மாவட்ட ஆட்சியர் சிவசௌந்தரவல்லி தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர கலந்து கொண்ட பொதுப்பணித்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள்அமைச்சர்எ.வ.வேலு ரிப்பன் வெட்டி சமுதாயக்கூட கட்டிடத்தை திறந்து வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர், அமைச்சர்,சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தனர்.

மேலும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். உடன் இந்த நிகழ்ச்சியின் போது

சட்டமன்ற உறுப்பினர்கள் அ.நல்லதம்பி,க.தேவராஜ் கந்திலி ஒன்றிய செயலாளர் மோகன்ராஜ்., முருகேசன். குணசேகரன்.கண்டுபிடி ஒன்றியகுழுதலைவர் திருமதி திருமுருகன். ஒன்றிய குழு உறுப்பினர் ஹேமலதா வினோத்குமார், மாவட்ட நெசவாளர் அணி தசரதன். ஊராட்சி மன்ற தலைவர் அழகிரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பெங்களூரில் இருந்து ஓசூருக்கு

# கன்டெய்னர் லாரியில் கடத்திய 1 டன் குட்கா பறிமுதல்!

## தப்பியோடிய டிரைவருக்கு வலை!!

ஓசூர், டிச 2:

கர்நாடக மாநில வனகல்வித்துறை அதிகாரிகளுக்கு, பெங்களூரில் இருந்து ஓசூருக்கு 407 கன்டெய்னர் லாரியில் கடத்தப்படுவதாக தகவல் வந்துள்ளது.

இதை தொடர்ந்து வாகனத்தை நிறுத்தி சோதனை செய்வதற்காக பொம்மச்சந்திரா பகுதியில் அதிகாரிகள் காத்து இருந்தனர்.

அப்போது அந்த வழியாக வந்த ஒரு வாகனம், அதிகாரிகள் கை காட்டியும் நிற்காமல் வேகமாக ஓசூரை நோக்கி சென்றதால் அதிகாரிகள் அந்த வாகனத்தை மடக்கி பிடிக்க பின்தொடர்ந்து துரத்தினர்.

ஆனால் வாகனத்தை ஒட்டி வந்த டிரைவர் கர்நாடக எல்லையை தாண்டி தமிழ் நாடு எல்லையான ஜுஜுவாடி பஸ் நிலையத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு தப்பி ஓடி விட்டார்.

அதையறிந்த அதிகாரிகள் சிப்காட் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்த சிப்காட் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து வாகனத்தை, மற்றொரு வாகனம்



மூலம் 'டோ' செய்துகாவல்நிலையத்திற்கு எடுத்து வந்தனர்.

காவல் நிலையத்திற்கு கொண்டு வந்த வாகனத்தை சோதனை செய்த போது, வாகனத்தில் இருந்த ரகசிய அறையில் சுமார் 1 டன் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா இருப்பது தெரிய வந்தது.

இது குறித்து சிப்காட் காவல் நிலைய போலீசார் தப்பியோடிய கன்டெய்னர் லாரி டிரைவரை வலைவீசி தேடி வருகின்றனர்.

## ஓசூர் அருகே

# இறந்த காளை மாட்டுக்கு தத்ரூபமாக சிலை!

## உரிமையாளர் நிறுவினார்!!



ஓசூர்,டிச 02:

கிருஷ்ணகிரிமாவட்டம்ஓசூர்அருகே உள்ள வேம்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த சீனிவாசனுக்கு சொந்தமான "மெர்சல் அரசன்" என்ற காளை மாடு, எருது விடும் விழாக்களில் கலந்து கொண்டு சுறுசுறுப்பும் வேகமும் காட்டி சீறிப் பாய்ந்து, பிடிக்க வருபவர்களை நேருக்கு நேராக சந்தித்து மின்னல் வேகத்தில் ஓடி சென்று பலரின் பாராட்டுகளையும் பெற்ற இந்த மாடு 4 ஆண்டுகளுக்கு முன் உயிரிழந்தது.

அதன் நினைவாக உரிமையாளர் சீனிவாசன் பல நலத்திட்டங்களை மேற்கொண்டு வருகிறார்.

4 ஆம் ஆண்டு நினைவாக, சூளகிரி மற்றும் ரவுண்டானா பகுதிகளில், தலைக்கவசம் இல்லாமல் சென்ற இரு சக்கர வாகன ஓட்டிகளுக்கு 50 இலவச தலைக்கவசங்களை வழங்கிய உரிமையாளர், சாலையோரத்தில் பூ விற்பவர்களுக்கு 5 நிழற்குடைகளும், பொதுமக்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கினார்.

அதனை தொடர்ந்து தனது காளை மாட்டின் நினைவாக கர்நாடகா மாநிலத்தில் தனது காளை மாட்டினை போலவே 2 லட்சம் ரூபாயில் தத்ரூப சிலை உருவாக்கப்பட்டு, அந்த சிலை காளைமாடு அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நிறுவியுள்ளார். மேலும் மெர்சல் அரசன் நினைவாக மணிமண்டபமும் கட்டப்பட்டது.

இதை தொடர்ந்து 100க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ரத்ததானம் வழங்கினர்.

## தீபத் திருவிழா:

# திருவண்ணாமலையில் டாஸ்மாக் கடைகள் மூடல்!

திருவண்ணாமலை,டிச.2

திருவண்ணாமலையில் உலக பிரசித்தி பெற்ற அருணாசலேஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. இங்கு தமிழகம் மட்டுமின்றி பல்வேறு மாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் தினமும் வருகை தந்து சாமி தரிசனம் செய்கின்றனர்.

இந்த நிலையில், திருவண்ணாமலை தீபத் திருவிழாவையொட்டி, டிச. 2,3,4 தேதிகளில் தனியார் மற்றும் டாஸ்மாக் மது கடைகளை மூட மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.



# மேட்டூர் அணை சாலையில் பேருந்து கவிழ்ந்து விபத்து!

## ஐயப்ப பக்தர்கள் 8 பேர் படுகாயம்!!

மேட்டூர்,டிச.02–

திருவண்ணாமலை மாவட்டம்,, பட்டியந்தல் பகுதியில் இருந்து நேற்று 47 ஐயப்பன் பக்தர்கள் ஏற்றி சென்ற பேருந்து இன்று காலை 8 மணிக்கு மேட்டூர் அணையின் அடிவாரம் பகுதிக்கு வந்தது. இந்த பேருந்தை தருமபுரி பகுதியை சேர்ந்த ஒட்டுனர் வேலு ஒட்டி வந்தார். காவிரி ஆற்றில் ஐயப்ப பக்தர்கள் குளிப்பதற்காக மட்டம் சாலையில் பேருந்து சென்ற போது 40 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் ஐயப்ப பக்தர்கள் 8 பேருக்கு லேசான காயம் ஏற்பட்டது. விபத்தை கண்ட பொதுமக்கள் காயம் அடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக மேட்டூர் அரசு மாவட்ட மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தனர். மேட்டூர் காவிரியில் புனித நீர் அடைவதற்கு நாள்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர் இவர்கள் மட்டம் சாலையை போக்குவரத்துக்காக பயன்படுத்தி வருகின்றனர். நகராட்சிக்கு சொந்தமான இந்த சாலை பல ஆண்டுகளுக்கு முன்பு மண் சரிவு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் உள்ளது. இதனை சீரமைக்க கோரி பலமுறை பலமுறை அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்தும் சாலையை சீரமைக்க எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. சரிந்த சாலையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாததால் பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு தெரிவித்தனர். நகராட்சி மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் அலட்சியம் காரணமாகவே விபத்து ஏற்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு கூறப்படுகிறது.



ஈரோடு மத்திய மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் ஈரோடு மத்திய மாவட்ட பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் முன்னிலையில் மாற்றுக் கட்சியைச் சேர்ந்த சுமார் 100 இளைஞர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.

### கடம்பூர் மலை கிராமத்தில்

# 5 நாட்டுத் துப்பாக்கிகளுடன் 3 பேர் பிடிபட்டனர்!

சத்தியமங்கலம்,டிச.2–

சத்தியமங்கலம் அடுத்த கடம்பூர் மலைப்பகுதி குன்றி மலை கிராமத்தில்



சட்ட விரோதமாக நாட்டு துப்பாக்கி வைத்திருப்பதாக கடம்பூர் தனி பிரிவு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனை தொடர்ந்து அப்பகுதியில் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது குன்றி ஜோசப் தொட்டியைச் சேர்ந்த சேசுராஜ் (36) என்பவர் குடிசையில் இருந்த 2 நாட்டு துப்பாக்கி சுமார் 10 லிட்டர் சாராய ஊற லை போலீசார் கைப்பற்றினர்.

இதேபோல் குன்றி மாரியம்மன் கோவில் பகுதி சேர்ந்த அருள் தாஸ்( 33) என்பவரிடம் 1 நாட்டு துப்பாக்கி குன்றி நாயகன் தொட்டியை சேர்ந்த சந்தோஷ் குமார் (27) என்பவரிடம் 2 நாட்டு துப்பாக்கி இருந்ததை போலீசார் பறிமுதல் செய்தனர்.

இது தொடர்பாக கடம்பூர் போலீசார் 3 பேரையும் கைது செய்து அவர்களிடம் இருந்து மொத்தம் 5 நாட்டு துப்பாக்கி சுமார் 10 லிட்டர் சாராய ஊறல் ஆகியவற்றை பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### உணவு, தண்ணீரை தேடி

# லிங்காபுரம் பகுதிக்குள் புகுந்த காட்டு யானைகள் கூட்டம்!

## விரட்டும் பணியில் வனத்துறையினர்!!

மேட்டுப்பாளையம்,டிச.2–

மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தை ஒட்டியுள்ள மேட்டுப்பாளையம், சிறுமுகை, காரமடை,ஆகிய பகுதிகளில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன. குறிப்பாக யானை, மான், கரடி, சிறுத்தை, புலி,காட்டெருமை,உள்ளிட்ட வன விலங்குகள்உயிர்வாழ்ந்து வருகின்றனர். கேரளா,தமிழ்நாடு, கர்நாடகா, ஆகிய மூன்று மாநிலங்களை இணைக்கும் மேற்கு தொடர்ச்சி வனப்பகுதி ஒட்டிய பகுதியில் கடந்தசிலதினங்களாகவே



யானையின் நடமாட்டம் அதிக அளவில் உள்ளது குறிப்பாக யானையின் வலசை பாதையில் ஆங்காங்கே ஆக்கிரப்புகள் அதிக அளவில் ஆகி உள்ளதால். யானை வலசை செல்லும்போது இடங்கள் முழுவதும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் ஊருக்குள் புகுந்து மனித விலங்குகள் மோதல் ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் இன்று காலை சிறுமுகை லிங்காபுரம் பகுதியில் தண்ணீர் அருந்துவதற்காக வனத்தை விட்டு காட்டு யானைகள் கூட்டம் லிங்காபுரம் கிராம பகுதிக்குள் புகுந்தது. இதனை அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் தங்களது செல்போன்களில் வீடியோவாக எடுத்தனர் மேலும் வனத்துறையினருக்கு தகவல் அளித்தனர். உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த வனத்துறையினர் காட்டு யானைகளை வணத்துக்குள் விரட்ட தீவிரமாக முயற்சி செய்து வருகின்றனர் மேலும் வனவிலங்குகள் கிராமப் பகுதிகள் வரும்போது அதனை துன்புறுத்த வேண்டாம் என்று வனத்துறையினர் கேட்டுக் கொண்டனர்.

### வால்பாறை அருகே

# தேயிலை தோட்டத்தில் புகுந்த காட்டு யானை!

கோவை,டிச.02

கேரள வனப்பகுதியில் இருந்து வால்பாறைசாலக்குடி சாலைக்கு காட்டு யானைகள் இடம் பெயர்ந்து வருகிறது. இதனால் கடந்த சில நாட்களாக வால்பாறை சுற்று வட்டார பகுதியில் காட்டு யானைகள் நடமாட்டம் அதிகரித்து உள்ளது.

இந்த நிலையில் வால்பாறை கூழாங்கல் ஆற்றுப்பகுதிக்கு அருகே சிறுகுன்றா எஸ்டேட் இடைச்சோலை வனப்பகுதியில் இருந்து காட்டு யானை ஒன்று வெளியே வந்தது. அந்த யானை கூழாங்கல் ஆற்றுக்கு அருகே தேயிலை தோட்டத்தில் முகாமிட்டு நின்றது. அப்போது அங்கு கடும் பனிமூட்டம் நிலவியது. இதனால் யானை அருகே வருவதை பார்த்ததும் தோட்ட தொழிலாளர்கள் அதிர்ச்சி அடைந்து தப்பி ஓடினர்.

இது குறித்த தகவலின் பேரில் வால்பாறை வனச்சரக வனத் துறையினர் கூழாங்கல் ஆற்றுப் பகுதி, சிறுகுன்றா எஸ்டேட் இடைச்சோலை பகுதிகளில் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். காட்டு யானையின் நடமாட்டம் இருப்பதால் தேயிலை தோட்டம் மற்றும் வனப்பகுதிகளின் அருகே சுற்றுலா பயணிகள் செல்ல வேண்டாம்.

மேலும் வனவிலங்குகளை காண இரவில் வாகனங்களில் செல்ல வேண்டாம் என்று வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# பள்ளி மாணவிக்கு பாலியல் தொந்தரவு!

திருவள்ளூர்,டிச.02

திருத்தணி ஜெ.ஜெ.ரவி நகர் பகுதியில் அரசு உதவி பெறும் உயர்நிலைப்பள்ளியில் இயங்கி வருகிறது. கடந்த வியாழக்கிழமை காலை திருத்தணி அருகே உள்ள கிராமத்தை சேர்ந்த 10ம் வகுப்பு மாணவி வழக்கம் போல் பள்ளிக்கு ஜெ.ஜெ.ரவி நகர் வழியாக சென்று கொண்டிருந்தார்.பள்ளிக்கு அருகே ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் மாணவி சென்று கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த வாலிபர் ஒருவர் மாணவியிடம் பாலியல் தொந்தரவில் ஈடுபட்டார். இதனால் அதிர்ச்சி அடைந்த மாணவி கூச்சலிடவே மர்ம நபர் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்று விட்டார்.இதுகுறித்து மாணவியின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில் திருத்தணி போலீசார் போக்சோ வழக்குபதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

### காட்டுப்பன்றிக்காக வைத்த

# மின் வேலியில் சிக்கி விவசாயி உயிரிழப்பு!

தூத்துக்குடி, டிச.02–

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு அருகே தெற்கு இலந்தைகுளம் அருகே ஆத்திகுளம் சுடலை மாடசாமி சுவாமி கோவில் தெருவை சேர்ந்த சிவனுகோனார் மகன் வடிவேல் (வயது 60). இவர் வீட்டின் அருகே உள்ள தோட்டத்தில் 5 ஏக்கர் நிலத்தில் மக்காச்சோளம் பயிர் விவசாயம் செய்துள்ளார். இந்த நிலையில் நேற்று முன் தினம் தோட்டத்திற்கு சென்று மக்காச்சோளப் பயிரில் தண்ணீர் பெருகி இருக்கிறதா என்று பார்ப்பதற்காக சென்றுள்ளார்.

அப்போது வேலியில் மின் இணைப்பு கொடுத்ததை மறந்து அந்த கம்பியில் மிதித்துள்ளார். அவர் மின்சாரம் தாக்கி தூக்கி வீசப்பட்டதில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். மேலும் அவரது மனைவி தனது கணவர், வீட்டிற்கு வெகு நேரமாகியும் வரவில்லையே என நினைத்து தோட்டத்திற்கு சென்று பார்த்த போது அங்கு அவர் மின்சாரம் தாக்கியதில் இறந்தது தெரியவந்தது. உடனே வீட்டிற்கு சென்று உறவினர்களிடம் கூறவே அவர்கள் மின்வாரிய அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர்.பின்னர் அவரை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இறந்து போன வடிவேலுக்கு சுப்புத்தாய் என்ற மனைவியும் 5 மகள்களும் உள்ளனர். காட்டுப்பன்றிக்காக வைத்த மின் வேலியில் சிக்கி விவசாயி இறந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகததை ஏற்படுத்தியுள்ளது.

# கிடப்பில் போடப்பட்ட தார் சாலை!

## பொதுமக்கள் அவதி!!



கடத்தூர், டிச.02

கடத்தூர் ஒன்றியம் தா அய்யம்பட்டி கிராமத்தில் சுமார் ஒரு கிலோமீட்டர்

தொலைவில் புதிதாக தார் சாலை அமைக்க வேண்டி கடந்த சில மாதங்களுக்கு முன்பு பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி எம்.எல்.ஏ. கோவிந்தசாமி தலைமையில் பூமி பூஜை செய்யப்பட்டது. ஆனால் பழுதடைந்த தார்சலையை சீரமைக்காமல் குண்டும் குழியுமாக தோண்டி வைத்து, ஜல்லி கற்கள் மட்டும் சாலை முழுவதும் நிரம்பி கிடப்பதால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். உடனடியாக இதுகுறித்து நெடுஞ்சாலைத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனபொதுமக்கள்கோரிக்கை விடு த்துள்ள னர்.

# வயலில் வேலை செய்தபோது மின்சாரம் தாக்கி தொழிலாளி சாவு !

நெல்லை, டிச.02

நெல்லை மாவட்டம் அம்பை அருகே உள்ள மேல ஏர் மாள்புரத்தை சேர்ந்தவர் பெருமாள் (50). விவசாய தொழிலாளியான இவர் இன்று காலை அதே ஊரைச் சேர்ந்த உறவினரான கருப்பன் என்பவருக்கு சொந்தமான வயலுக்கு வேலைக்கு சென்றார். அ ப்போது வயலில் உள்ள பம்பு செட் மின் மீட்டரில் பழுது ஏற்பட்டுள்ளது. அதனை அவர் உறவினருடன் சேர்ந்து சரிசெய்துக் கொண்டிருந்தார். அப்போது மின்மீட்டருக்கு அருகே இருந்த ஸ்டே கம்பியில் தெரியாமல் கை பட்டுள்ளது. அதில் எதிர்பாராத விதமாக பெருமாள் உடலில் மின்சாரம் பாய்ந்ததில் அவர் தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்.



தர்மபுரி மாவட்டம் பையர்நத்தம் ஊராட்சியில் ரூ.9.69 கோடி மதிப்பிலான புதிய திட்டப்பணிகளுக்கு முன்னாள் அமைச்சரும், மேற்கு மாவட்ட செயலாளருமான பி. பழனியப்பன் பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார். அருகில் ஒன்றிய செயலாளர் சரவணன் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### இளம்பெண் தற்கொலை வழக்கில்

# கணவர் உள்பட 2 பேருக்கு 3 ஆண்டு சிறை தண்டனை!

## ஊட்டி மகிளா கோர்ட்டு தீர்ப்பு!!

ஊட்டி, டிச.2

நீலகிரி மாவட்டம் ஊட்டி அடுத்த இடுஹட்டி கிராமத்தை சேர்ந்தவர் ரவி. இவருடைய மகள் ஷோபனா என்பவருக்கும் கீழ் தொரையட்டி பகுதியை சேர்ந்த பிரபு என்பவருக்கும் கடந்த 2011ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இந்தநிலையில் பிரபுவுக்கும் அதே பகுதியை சேர்ந்த வேலன் என்பவரது மனைவி தீனா என்பவருக்கும் பழக்கம் ஏற்பட்டு தகாத உறவாக மாறியதாக தெரிகிறது. இதன் காரணமாக குடும்பத்திற்குள் தகராறு ஏற்பட்டுவந்துள்ளது.மேலும் பிரபு மற்றும் அவருடைய குடும்பத்தினர் ஷோபனாவை தகாத வார்த்தையால் திட்டி மன உளைச்சல் ஏற்படுத்தியதாக கூறப்படுகிறது. இதனால் ஷோபனா கோபித்துக் கொண்டு அவருடைய தந்தை வீட்டுக்கு சென்று விட்டார். இதன் பிறகு குடும்பத்தினர் சமாதானம் பேசி ஷோபனாவை பிரபு வீட்டுக்கு அனுப்பினார். ஆனாலும் பிரபு தீனா பழக்கத்தால் குடும்பத்தில் பிரச்சினை தொடர்ந்ததால் ஷோபனா 1772018 அன்று தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து தேனாடுகம்பை போலீசார் விசாரணை நடத்தி ஷோபனாவின் கணவர் பிரபு, அவருடையகுடும்பத்தினர் மூன்று பேர் மற்றும் தீனா ஆகிய 5 பேர் மீது வழக்கு பதிவு செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை ஊட்டி மகிளா கோர்ட்டில் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கில் தற்போது தீர்ப்பு கூறப்பட்டது.

இதன்படி ஷோபனாவின் கணவர் பிரபு மற்றும் பிரபுவுடன் தகாத உறவில் இருந்ததாக கூறப்பட்ட தீனா ஆகிய இரண்டு பேருக்கு தலா 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.5000 அபராதம் விதித்து நீதிபதி எம்.செந்தில்குமார் உத்தரவிட்டார். மேலும் பாதிக்கப்பட்ட பெண்ணின்குடும்பத்தினருக்கு ரூ.1 லட்சம் இழப்பீடு வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினார். இந்த வழக்கில் அரசு தரப்பில் வக்கீல் பி.செந்தில்குமார் ஆஜராகி வாதாடினார்.

### அவ்வையார் விருது பெற

# பெண்கள் முன்னேற்றத்துக்கு சேவை புரிந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்!

## கிருஷ்ணகிரி கலெக்டர் அழைப்பு!!

கிருஷ்ணகிரி, டிச.2–

பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்தவர்கள், ஒளவையார் விருது பெற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச மகளிர் தினம் மார்ச் மாதம் 8ம் தேதி பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்த மகளிருக்கு தமிழக முதல்வரால் ஒளவையர் விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது பெறுபவருக்கு ரூ.1.50 லட்சத்திற்கான காசோலை, பொன்னாடை மற்றும் சான்று வழங்கப்படும்.

இவ்விருதிற்கு குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையிலான நடவடிக்கைகள், சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித்தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிக்கை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் மகளிராக இருத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் நகர் தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டவராகவும், 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். பெண்களுக்கான சமூக சேவையை தவிர்த்து வேறு சமூக சேவைகள் இவ்விருதுக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இவ்விருதிற்கு தகுதியான மகளிர் https://awards.gov.in என்ற இணையதளம் வாயிலாக வருகிற டிசம்பர் மாதம் 31ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். இணையதளம் மூலம் விண்ணப்பிக்க ப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

### தொப்பூர் அருகே

# புதிய வழித்தடத்தில் பேருந்து சேவை!

## முன்னாள் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!!



நல்லம்பள்ளிடிச.2–

தர்மபுரி மாவட்டம் தொப்பூர் அருகே கஸ்தூரி கோம்பை மக்கள் நீண்ட நாட்களாக பேருந்து வசதி இல்லாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தனர்.அந்த பகுதியைச் சேர்ந்த மக்கள் அதன் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்து தொடர்ச்சியாக மனு வழங்கி வந்தனர் அவர்களின் கோரிக்கையை ஏற்று மேட்டூரில் இருந்து கைகட்டி வெள்ளார் வழியாக கஸ்தூரி கோம்பை வரை புதிய பேருந்து இயக்க அனுமதி அளித்தனர்.

அதன் அடிப்படையில் இன்று தர்மபுரி மாவட்டம் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் தடகம் சுப்பிரமணி அவர்கள் கொடியாசித்து பேருந்தை தொடங்கி வைத்தார் இந்த நிகழ்ச்சியை நல்லம்பள்ளி தெற்கு ஒன்றிய செயலாளர் கேபி மல்லமுத்து ஏற்பாட்டில் நடைபெற்றது. பொதுக்குழு உறுப்பினர் பிசி.துரைசாமி

தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் ஆர் ஈஸ்வர் ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## மலையடிவாரத்தில் பிணமாக கிடந்தவர்:

# பர்கூர் பெண் அடித்துக்கொலை!

## சொத்து பிரச்சனையால் தீர்த்துக்கட்டிய உறவினர் உள்பட 3 பேர் கைது!!

கிருஷ்ணகிரி,டிச.2

பர்கூர் அருகே பெண் சாவில் திடுக்கிடும திருப்பமாக சொத்து பிரச்சினையில் உறவினர் உள்பட 3 பேர் சேர்ந்து தீர்த்து கட்டியது தெரிய வந்தது.

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அடுத்த ஐகுந்தம் கொத்தப்பள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட மேல்சீனிவாசபுரத்தை சேர்ந்தவர் முருகன். இறந்து விட்டார். இவரது மனைவி கோவிந்தம்மாள் (வயது 56). கூலித் தொழிலாளி. கடந்த 25&ந் தேதி ஊரக வேலை திட்டத்தில் அப்பகுதியில் உள்ள பெரியமலை அடிவாரத்தில் பண்ணைக்குட்டை அமைக்கும் பணிக்காக சென்ற அவர் மலை அடிவாரத்தில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார்.

இது குறித்து தகவல் அறிந்ததும் பர்கூர் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்றனர். அப்போது இறந்து கிடந்த கோவிந்தம்மாளின் உடலில காயம் இருந்தது.

மேலும் கொலுசு, காதில் போட்டிருந்த நகைகள் காணவில்லை. இதனால் நகைக்காக இந்த கொலை நடந்ததா என போலீசார் விசாரணை நடத்தினார்கள்.

இதனிடையே பிரேத பரிசோதனை அறிக்கையில் கோவிந்தம்மாள் கட்டையால் தாக்கியும், கழுதை நெரித்தும் கொலை செய்யப்பட்டது தெரிய வந்தது.

இதையடுத்து கொலையில் தொடர்புடைய குற்றவாளிகளை பிடிக்க மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு தங்கதுரை உத்தர விட்டார்.

அதன்பேரில் துணை போலீஸ் சூப்பிரண்டு முத்துகிருஷ்ணன் மேற்பார்வையில் இன்ஸ்பெக்டர்கள் இளவரசன் (பர்கூர்), அன்பழகன் (நாகரசம்பட்டி), சப்&இன்ஸபெக்டர்கள் அமர்நாத், பிரபாகரன், விஜய் உள்ளிட்டோர் கொண்ட தனிப்படையினர் விசாரணை நடத்தினர்கள். போலீசாரின் விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியானது. அவை வருமாறு:

கொலைசெய்யப்பட்ட கோவிந்தம்மாளின் கணவர் முருகன் கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்பாக இறந்து விட்டார்.

இறப்பதற்கு முன்பாக அவர் தனது 57 சென்ட் நிலத்தை சுப்பிரமணி என்பவருக்கு ஒப்பந்தம் போட்டு கொடுத்து பணம் பெற்றிருந்தார்.

இந்த நிலையில் அந்த நிலத்தை சுப்பிரமணியிடம் இருந்து முருகனின் அண்ணன் பச்சியப்பனின் மகன் சக்திவேல் (44) வாங்கினார்.

தங்களின் நிலத்தை சக்திவேல் வாங்கி விட்டாரே என கோவிந்தம்மாள் அடிக்கடி அவரிடம் தகராறு செய்து வந்தார்.

இந்த நிலையில் சக்திவேல் புதிய வீடு கட்டி குடி போனார்.

அப்போது அங்கு வந்த கோவிந்தம்மாள் சக்திவேலையும் அவருக்கு ஆதரவாக பேசிய உறவினர்களான மேல் சீனிவாசபுரத்தை சேர்ந்த வெங்கட்ராமன் (65), கோவிந்தராஜ் (64) ஆகியோரையும் தகாத வார்த்தையால் திட்டினார்.

இது அவர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

இதனால் அவர்கள் கோவிந்தம்மாளை தீர்த்து கட்ட முடிவு செய்தனர்.

அதன்படி ஏரி வேலைக்கு சென்று திரும்பிய கோவிந்தம்மாளை சக்திவேல், வெங்கட்ராமன், கோவிந்தராஜ் ஆகிய 3 பேரும் சேர்ந்து கட்டையால் அடித்தும், கழுத்தை நெரித்தும் கொலை செய்தனர்.

பின்னர் அவரது செல்போன், கால் கொலுசு, தோட்டை எடுத்து குட்டையில் வீசி விட்டு நகைக்காக கொலை நடந்ததை போல நாடகமாடினார்கள்.

மேற்கண்ட திடுக்கிடும் தகவல்கள் போலீசாரின் விசாரணையில் தெரிய வந்தது.

இதையடுத்து சக்திவேல், வெங்கட்ராமன், கோவிந்தராஜ் ஆகிய 3 பேரையும் போலீசார் நேற்று மாலை கைது செய்தனர். பர்கூர் அருகே சொத்து பிரச்சினையில் பெண்ணை உறவினர் உள்பட 3 பேர் சேர்ந்து கொன்று நாடகமாடிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் மைய அலுவலக கூட்டரங்கில் அனைத்து கட்சி முகவர்களுடன் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த கணக்கெடுப்பு படிவங்களை பொதுமக்களிடம் பூர்த்தி செய்து விரைந்து பெறுவதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் உதவி ஆணையாளர்கள் பார்த்தசாரதி(மண்டலம்3), ராஜசேகர் (பொது) (பொ), தேர்தல் துணை வட்டாட்சியர் மேகநாதன், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கோடம்பாக்கம் மண்டலம், வார்டு141, கண்ணம்மாபேட்டை செல்லப் பிராணிகள் சிகிச்சை மையத்தில், வளர்ப்பு நாய்களுக்கு கால்நடை மருத்துவர்களால் வெறி நாய்க்கடி நோய்த் தடுப்பூசி செலுத்துதல், மைக்ரோ சிப்பிங் பொருத்துதல் மற்றும் உரிமம் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.



சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு எண்: 137.பொன்னம்பலம் சாலையில் டிட்வா புயல் காரணமாக விழுந்த மரக்கிளைகளை அகற்றும் பணி நடைபெற்றது.



சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு195, எழில் நகர் பகுதியில் டிட்வா புயல் மழையின் காரணமாக தாழ்வான பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

## பண்ணந்தூர் இந்திராநகர் கிராமத்தில்

# ஸ்ரீ மாரியம்மன் கோவில் மகா கும்பாபிஷேக விழா!



போச்சம்பள்ளி டிச.2,

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த பண்ணந்தூர் ஊராட்சி இந்திராநகர் கிராமத்தில் உள்ள பழமையான ஸ்ரீ மாரியம்மன் கோவில், விநாயகர் கோவில், ஸ்ரீ சாமாத்தம்மன் கோவில் புதுபிக்கும் பணியானது கடந்த நான்கு ஆண்டுகளாக நடைபெற்றது. இதில் கடந்த மாதம் கோவில் கட்டுமான பணிகள் மற்றும் வனம் தீட்டுதல், கோவிலுக்கு புதியதாக தேர் ஆகிய பணிகள் முடிவடைந்த நிலையில் கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக திருக்குட பெரும் நன்னீராட்டு சாந்தி விழா நடைபெற்றது. இதற்காக தென்பெண்ணை ஆற்றில் இருந்து புனித நீர் எடுத்துவரப்பட்டு மேல தாளங்கள் முழங்க ஊர்வலமாக பண்ணந்தூர் எருது கட்டு மண்டு, ஊராட்சி மன்ற அலுவலகம், நான்கு வழி சாலை தரும தோப்பு ஆகிய வழியாக கோவிலுக்கு புனித நீரை இந்திராநகர் கிராம மக்கள் மஞ்சள் நிற ஆடையில் விரதமிருந்து எடுத்து வந்தனர். இந்த நிகழ்ச்சியில் இந்திராநகர் கிராம மக்கள் பெருந்திரளானோர் கலந்து கொண்டு தீர்த்த படம் முளைப்பாரி எடுத்துச் சென்றனர். இதனைத் தொடர்ந்து இன்று மாலை மங்கள வாத்தியம் புண்யாவாஹனம், ரக்ஷாபந்தனன், அக்னகாரியத்துடன். மகாபூர்ணாகாதியுடன் முதல் கால பூஜை முடிவுறும் , இதனைத் தொடர்ந்து இரண்டாம் கால பூஜை நடைபெறும் அதனைத் தொடர்ந்து பண்ணந்தூர் தென்பெண்ணை ஆற்றில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீரை எடுத்து கடகம்புறப்பட்டுஸ்ரீமாரியம்மன்கோவில்விமானத்திற்கும் அதனைத் தொடர்ந்து மூலஸ்தானத்திற்கும் புனித நீரானது ஊற்றப்பட்டது. இதில் பர்கூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.ராஜேந்திரன் கலந்துகொண்டு பங்கேற்றார், அவருக்கு கும்பம் மரியாதை செலுத்தப்ப ட்டது. இதில் முன்னாள் ஒன்றிய செயலாளர் எம்.எஸ்.பிரபாகரன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலளார் ரவிச்சந்திரன், ராஜா அண்ணாமலை இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஸ்ரீ மாரியம்மன் கோவில் திருப்பணிக்குழுவினர் மற்றும் கிராம முக்கியஸ்தர்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தனர்.



## சி.மெய்யூர் கிராமத்தில் 20 ஆண்டுகளுக்குப் பிறகு

# பழமை வாய்ந்த ஸ்ரீ கரக காரி அம்மன் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம்!

விழுப்புரம்,டிச.2

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே சி. மெய்யூர் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கரக காரி அம்மன் திருக்கோயில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று அதனை தொடர்ந்து 20 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று மகா கும்பாபிஷேகம் வெகு விமர்சியாக நடைபெற்றது இந்த விழாவில் திருக்கோவிலூர், மற்றும் திருவெண்ணெய் நல்லூர் சுற்றுவட்டார பகுதியில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்,

முன்னதாக திருக்கோயிலில் அமைக்கப்பட்டிருந்த யாகசாலையில் இருந்து செண்டை மேளங்கள் முழங்க புனித நீர் ஊர்வலமாக கொண்டுவரப்பட்டு கோயிலின் ராஜகோபுரம் மற்றும் மூலவர் விமான கோபுரம் மற்றும் பரிவார தெய்வ கலசங்களுக்கு நாதஸ்வர வாத்தியங்கள் முழங்க புனித நீர் ஊற்றியும் பக்தர்களின் பக்தி கோஷங்களுடன் மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது.



நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் கோவை தொண்டாமுத்தூரில் நடைபெற்றது. இந்த முகாமை கோவை திமுக வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி துவக்கி வைத்து பேசுகையில், மருத்துவத் துறையில் தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ்ந்து வருகிறது. இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48, மக்களை தேடி மருத்துவம் என பல்வேறு திட்டங்களை தமிழக முதல்வர் தமிழக மக்களுக்காக தந்துள்ளார். அது மட்டுமல்லாமல் இதுவரை 35 ஆயிரம் மக்கள் இந்த மருத்துவ முகாம் மூலம் பயன்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய பணிகளுக்காக அரும்பாடுபடும் மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும்,சுகாதார அலுவலர்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மகளிர் உரிமைத் தொகை, பேருந்தில் இலவச பயணம், கல்லூரி மாணவர்களுக்கு ரூபாய் 1000 ஊக்கத்தொகை என பல்வேறு திட்டங்கள் தமிழக மக்களுக்கு மிகப்பெரிய உதவியாக உள்ளது. இத்தகைய ஆட்சிக்கு மக்கள் என்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கூறினார். இந்நிகழ்ச்சியில் பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம், முதியோர்களுக்கு மருந்து பெட்டகங்களும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் மாவட்ட சுகாதார அலுவலர் பாலுசாமி உட்பட அரசு அலுவலகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# வாணியம்பாடி தேவி வெங்கடாசலம் பொதுப் பள்ளி ஆண்டு விழா!




வாணியம்பாடி, டிச.2

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே தேவி வெங்கடாசலம் பொதுப் பள்ளி ஆண்டு விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளி செயலாளர் வி.வி.கிரிராஜ் தலைமை வகித்தார்.

இணைச்செயலாளர் ஹெச்.ஜெயலெட்சுமி கிரிராஜ் முன்னிலை வகித்தார். பள்ளி முதல்வர் எம். லட்சுமி அனைவரையும் வரவேற்று ஆண்டறிக்கை வாசித்தார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக மருத்துவர் மற்றும் பேராசிரியர் நவீன் ஞானசேகரன் கலந்து கொண்டு கடந்த கல்வியாண்டில் சாதனை படைத்த மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கிக் கௌரவித்து சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசுகையில். மாணவர்களின் திறன் மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு பெற்றோர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை குறித்து எடுத்துரைத்தார். ஒவ்வொரு மாணவனும் எதிர்காலச் சவால்களைச் சமாளிக்கும் திறன்களில் மேம்பாடு அடைவதோடு நமது பண்பாடு மற்றும் கலாச்சாரத்தைப் பேணிக்காக்க வேண்டும் என்று பேசினார். தொடர்ந்து பள்ளி மாணவர்களின் நடைபெற்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகள் கூடியிருந்த அனைவரையும் வெகுவாக கவர்ந்தது. நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். முடிவில் பள்ளி முதல்வர் எம். லட்சுமி நன்றி கூறினார்.



ஏற்காட்டில் எஸ்.ஐ.ஆர். படிவம் திருத்தப்பணிகள் மற்றும் சரிபார்க்கும் பணிக்கான சிறப்பு முகாம் நடந்து வருகிறது. ஏற்காடு ஜரினா கார்டு மாரியம்மன் கோவில் வளாகத்தில் 41, 42, 43, 44 ஆகிய பூத்தில் உள்ள வாக்காளர்களின்படிவம் சரிபார்க்கப்பட்டது. அதனை ஏற்காடு வட்டாட்சியர் செல்வராஜ் ஆய்வு செய்தார்.

## காவேரிப்பட்டினம் அருகே

# விநாயகர் கோவிலில் ஐதீகப்படி நுழைவாயில்!

## திரளான பக்தர்கள் பங்கேற்பு!!

கிருஷ்ணகிரி,டிச.2

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியம்குண்டலப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட குரும்பட்டி கிராமத்தில் மிகவும் பழமை வாய்ந்த ஸ்ரீ விநாயகர் திருக்கோவில் உள்ளது.

சுமார் ஐந்து தலைமுறை மேலாக மக்கள் வழிபட்டு வரும் இந்த ஸ்ரீ விநாயகர் திருக்கோயிலினை புதுபிக்கும் வகையில் புதியதாக திருக்கோவில் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது,



இந்த நிலையில் திருக்கோயிலின் கட்டுமான பணியின் போது இன்று கோவில் நுழைவாயற்படி அமைப்பற்கான பூஜைகள் நடைப்பெற்றது.

ஸ்ரீ வினாயகர் பெருமானுக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட நிலையில் இந்த கோவிலுக்கு ஐதீக முறைப்படி வாஸ்கால் அமைக்கப்பட்டது,

குரும்பட்டி கிராமத்தை சேர்ந்த மந்திரிகவுண்டர் கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட முன்னாள் காங்கிரஸ் தலைவரும் காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினருமான எல்.சுப்பிரமணியன், காவேரிப்பட்டினம் ஒன்றிய திமுக செயலாளர் சி, சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் தொழிலதிபர் சுந்தரம், தேங்காய் வியாபாரிகர்ணன், கோவில் தர்மகர்தாக்கள்முத்துவேல், ஓய்வு பெற்ற பட்டு வளர்ச்சி துறைஅலுவலர்முத்துசாமி, உள்பட குரும்பட்டி கிராமத்தை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.